## ரணவிரு சேவா அதிகார சபை - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரணவிரு சேவா அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாளனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 23 ஆம் திகதி ரூபா 2,100,000 இற்கு மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் ஒன்று 2018 ஜனவரி 26 ஆம் திகதி ரூபா 1,373,000 இற்கு விற்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு பதிலாக ரூபா 1,500,000 ஆன ஆரம்ப கிரயத்தை அடிப்படையாக கொண்ட சொத்து அகற்றலினால் ஏற்பட்ட இலாபம் கணக்கிடப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் சொத்து அகற்றல் இலாபம் ரூபா 1,661,425 இனால் மேலதிகமாக காண்பிக்கபட்டிருந்ததுடன் மோட்டார் வாகனத்தின் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 1,101,425 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்களில் சீராக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்றதாக கணக்கீட்டுப் பதிவுகள் பதிவதற்கு தேவையதன ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

-----------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமானம் 756 | கடந்த வருடத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதிக பொருள் மெய்மையாய்வு தொடர்பான அறிக்கை 2018 மே 10 ஆம் திகதி முன் வைக்கப்பட்டிருந்தததுடன் அவ்வறிக்கையின் படி 31 அலகுகளுக்குரிய 170 இருப்பு விடயங்களில் பற்றாக்குறை ஏற்பட்டு இருந்தது. பொருள் மெய்மையாய்வு மீண்டும் நடாத்தப்பட்டு 2018 ஒக்தோபர் 19 ஆம் திகதி முன் வைக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி 18 அலகுகளுக்குரிய 68 இருப்பு விடயங்கள் வரை அந்த பற்றாக்குறை குறைந்திருந்த போதிலும் காணாமல் போன பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை 2018 திசெம்பர் 31 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2016/2017 பௌதீக பொருளாய்வு கணக்கெடுப்பில் காணப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக 2018 ஒக்தோபர் 19 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் அவ் பௌதீக பொருளாய்வு மீண்டும் நடத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப் பற்றாக்குறை காணப்பட்ட 18 அலகுகளுக்குரிய இருப்பு விடயங்கள் 68 வரை குறைந்தன. இப்பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் படி நடவடிக்கை எடுக்க எதிர்ப்பாக்கப்படுகின்றது. | காணாமல் போன பொருட்கள் தொடர்பான பௌதீக பொருள் ஆய்விற்கு தொடர்புப்பட்ட பின்னரான பரிசோதனை நடவடிக்கைகள் கால தாமதம் இன்றி செய்யப்பட்டு இருப்புக் கட்டுபாடு தொடர்பான உள்ளக கட்டுபாடு முறைகள் வலுவுள்ளதாக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. |
| 2002 மே 24 ஆந் திகதிய 21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரணவிரு சேவா அதிகார சபையினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கபட வேண்டிய போதிலும் 2016 மற்றும் 2017 வருடங்களுக்கான செயலாற்றல் அறிக்கை 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படவில்லை | 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கை அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி பெற்றதன் பின் எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரஃ ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிஃ எடுக்கப்படவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி 371 | பிரமானம் | பணி நிறைவடைந்ததுடன் உடனடியாக பெற்றுக்கொண்ட முற்பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டினுள் அதிகாரசபையின் இரு ஊழியர்களுக்கு 5 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த மொத்த பணமான ரூபா 1,830,450 தொகையான பண முற்பணம் 2018 திசெம்பர் 31ஆம் திகதி வரையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாக திருப்திப்பட முடியாததனால் அரசு பாதுகாப்பு அமைச்சு ஊடாக மீள் விசாரணை நடாத்தப்பட நடவடிக்கை எடுக்க எதிர்ப்பாக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினாலும் இது தொடர்பாக விசரனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | முற்பணம் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான உள்ளக கட்டுபாட்டு முறை வலுவுள்ளதாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 22,447,903 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனுடன் ஒத்த கடந்த வருடத்தின் பற்றாகுறை ரூபா 61,412,678 ஆக இருந்தததது. அதன்படி நிதி விளைவில் ரூபா. 38,964,775 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு கடந்த வருடத்தை பார்க்கிலும் நடைமுறை வருடத்தில் அதிகாரசபையின் மீண்டெழும் செலவு ரூபா. 50,680,390 ஆல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் முழு வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 11,715,616 இனால் குறைந்து காணப்பட்ட போதிலும் சுபிரி வாசனா சம்பத சீட்டின் பெறப்பட்ட வருமானம் கடந்த வருடத்திற்கு இணையாக ரூபா. 8,952,118 இனால், அதாவது 100 இற்கு 17.2 இனால் குறைந்து காணப்பட்டது இதற்கு காரணமாகும். அதே போல் செயற்திட்ட செலவு கடந்த வருடத்திற்கு இணையாக ரூபா 32,113,180 இனால் குறைதல் மற்றும் வளங்கள் மற்றும் ஒப்பந்த சேவை கிரயம் முறையே ரூபா 3,153,507 மற்றும் ரூபா. 2,078,721 இனால் குறைதல் பிரதான மாற்றமாக இனங்காணப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்ட செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

**(அ)** கடந்த 3 வருட காலப்பகுதியினுள் படை வீரர்களின் நலனுக்காக அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள், மருந்தகங்கள் மற்றும் உளவியல் வேலை திட்டங்கள் மீளாய்வாண்டினுள் செயற்படுத்தப்படவில்லை. அதே போன்று ஊனமுற்ற படை வீரருக்கான கேட்டல் மற்றும் பார்வை உபகரணங்கள், சுய தொழில் மற்றும் புலமை பரிசில் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான வேலைத்திட்டங்களுக்காக தாங்கப்பட்டிருந்த செலவுகள் வருடார்ந்தம் முறையாக குறைந்திருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் படை வீரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பம் தொடர்பான சமூக தேவைகளை அறிந்து கொள்வதற்கு மற்றும் அது தொடர்பான நலத்திட்ட நிகழ்ச்சிகள் செயற்படுத்துவதற்காக வேலைத்திட்டங்கள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ)** அதிகாரசபையினால் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குள் செயற்பட்ட படை வீரர் நலன்புரி திட்டத்திற்காக ஏற்கபட்ட செலவும் மற்றும் அதிகார சபையினால் சாதாரண நிர்வாக செலவுகள் ஒப்பிடபட்டு கீழே குறிப்பில் காட்ப்படுகின்றது.

| | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|
| படைவீரர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவு | 389,812,549 | 421,925,729 |
| சாதாரண நிர்வாக செலவு | 84,113,655 | 96,617,499 |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இற்கு மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 15,656,250 ஆக காணப்பட்ட சதுச அடி 2887 ஆன பிரதான அலுவலக கட்டிடத்தில் மேல் மாடி 2012 ஆம் வருடம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதிகார சபையினால் 2016 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 42,138, பெறுமதி உடைய 06 கணனி மேசைகள் 2018 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்படாது விளைவற்றதாக கழஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | கட்டிடத்தில் மேல் மாடி 2019 ஜுலை 1 ஆம் திகதியிலிருந்து அலுவலக நடவடிகைக்காக பயன்படுத்துவற்காக இயலுமான வகையில் தயாரிப்பு நடவடிகைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதிகாரசபையின் தேவைபாட்டின் மீது வருங்காலத்தில் அக் கணினி மேசைகள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அதிகாரசபை சார்ந்த சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| படைவீரர் தொடர்பான தரவு தளம் பேனப்பாமையும் அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான உள்ளக கட்டுபாட்டுத் தளம் வலுவுள்ளதாக காணப்படாமையினால் பல்வேறுபட்ட மோசடிகள் நடைப்பெற்ற சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ரணவிரு மாபிய ரெகவரண கொடுப்பனவு முறையின் கீழ் ஒரு தாய்க்கு மற்றும் தந்தைக்கு மாதந்தம் ரூபா 750 வீதம் கொடுப்பனவு மட்டும் செலுத்த இயலுமாக இருப்பிலும் 2016 ஜூன் மாதத்தில் இருந்தது 2017 நவம்பர் மாதம் வரை 18 மாதங்களுக்குள் ஒரு அரச வங்கியில் இருந்து இரு கணக்கு உரிமையாளர்களுக்கு ரூபா 5,941,500 செலுத்தப்பட்டிருந்தது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உள்ளக பரிசீலனையின் போது மேற்படி பெறுமதி தொடர்பாக முறைக்கேடு நடைப்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதடன் நடைமுறை வருடத்தின் முடிவில் அது தொடர்பாக சட்ட நடவடிகைகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது | குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு புகார் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அது தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் நடைபெறாமல் காணப்பட கட்டுப்பட்டு தளத்தில் முறையாக பேனி நேர்ந்த நஷ்டத்தை ஈடுசெய்ய நடவடிகை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 நிதியங்களின் குைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பொது திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 மூலதன ஒதுக்கீடு குறிப்பிட்ட வேலைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | இப்பணம் அதிகாரசபையின் கட்டிடத்திற்காக பயன்படுத்துவதற்கு நிதி அமைச்சரின் அனுமதி 2018 ஒக்தோபர் 8 ஆம் திகதி பெறப்பட்டிருந்ததுடன் தேசிய வரவு செலவு திணைக்களத்தினால் நிதி 2018 நவம்பர் 19 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது அதன்படி பணம் முறையாக பயன்படுத்துவதற்கு இயலாது காணப்பட்டது. | தொடர்புடைய குறிக்கோள் அடையாளப்படுத்தப்பட்டு செயல் திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்காக வளிச்சீராக்கல் கட்டமைப்பு ஒன்றின் தேவைப்பாடு முறையாக கணக்கிடப்பட்டு வளிப்பதனமாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது முகாமைத்துவ குழுவின் அனுமதியினால் வாடகையின் அடிப்படையில் வளிப்பதனமாக்கி இயந்திரம் பெற்றுக்கொள்ளவதற்காக நடைமுறை வருடத்தில் 09 மாதங்களுக்குள் ரூபா 2,057,442 செலுத்தப்பட்டிருந்தது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் 1.2.1(ஈ) இன் படி தகுதிகளில் ஆர்வம் காட்டுகின்ற தரப்பினருக்கு கொள்வனவில் பங்குகொள்வதற்காக நியாயமான ஒத்த சந்தர்ப்பங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டிய போதிலும் இந்த பெறுகை தொடர்பாக ஒரு வழங்குனரிடமிருந்து மட்டும் விலைகோரப்பட்டதன் காரணமாக சந்தையில் மற்றைய சினம் கொண்ட வழங்குனர் நிறுவனங்களுக்காக நியாயமான சந்தர்ப்பங்கள் பெற்றுகொடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | அதிகாரசபைக்கு நிரந்தர வளிப்பதனமாக்கி அமைப்பு கொள்வனவு செய்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்காக நீண்ட காலம் எடுக்கப்பட்டதினால் வாடகை அடிப்படையில் நிறுவனத்தின் வளிப்பதனமாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு டென்டர் குழுவின் அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2 மில்லியன் அளவு பணம் செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது. | பெறுகை வழிக்காட்டி கோவையினக்கு இணங்க முறையாக கொள்வனவு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

அதிகார சபையின் ஊழியர்கள் தொடர்பாக நடைமுறை ஆண்டிற்கான தகவல்கள் கீழே காட்டப்படுகின்றது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | 2018 திசெம்பர் 31 திகதிக்கு காணப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | இணைக்கப்பட்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை | சிவில் ஊழியர்களின் எண்ணிக்கை | |
| நிறைவேற்று | 20 | 8 | 21* | 9 |
| நிறைவேற்று அல்லாத | 70 | 35 | 54 | 19 |
| **மொத்தம்** | 90 | 43 | 75 | 28 |

- வகிப்பவருக்கு தனிப்பட்டதான நிலைகள் 06 உள்ளடக்கப்பட்டுள்ளது.